**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.4, கோயமுத்தூர்</u>**

**முன்னிலை: திரு. S. அருண்குமார், B.A., B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.4,**

**கோயமுத்தூர்.**

**<u>2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 10 ம் நாள் வெள்ளிக்கிழமை</u>**

**<u>Crlmp.No.3354/2026</u>**

**<u>சி.எஸ்.ஆர்.எண்.1579/2026</u>**

ஜெயந்தி

க/பெ.நடராஜன் ..மனுதாரர்/உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக – ஆய்வாளர்.

கோவை, மாநகர சைபர் கிரைம் காவல்நிலையம்

குற்ற எண்.27/2026 .. எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 02.04.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் மின்னனு முறையில் தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மேற்படி மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.Shreyas அவர்களும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் எஸ்.வர்ணிஹா நிலை-1 அவர்களும் முன்னிலையாகி எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் இம்மனுவின் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்.

**<u>உத்தரவு</u>**

1) மனுதாரர் தரப்பில் மேற்படி மனுதாரர் கிரண்லால் என்பவர் ஆன்லைன் மோசடி மூலம் ரூ.58,37,000/- பணம் மோசடி செய்த நபர்கள் மீது நடிவடிக்கை எடுக்கக்கோரி கோவை மாநகர சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததன் அடிப்படையில், போலீசார் மேற்படி வழக்கு சம்மந்தமாக பகுதி தொகையை முடக்கியதாகவும், மேற்படி போலீசாரால் முடக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்ற வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையான ரூ.9,00,339/- யை இடைக்காலமாக மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் அறிவிப்பு கொடுத்து வினவிய போது, அரசுதரப்பில் மேற்படி மனுதாரர் இழந்த மொத்த தொகை ரூ.58,37,000/- என்றும், மேற்படி சந்தேக நபரின் வங்கி கணக்கிலிருந்து பகுதி தொகையை முடக்கியதாகவும், மேலும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.4 அவர்களின் முறையாக ஆணை பெறப்பட்டு சம்மந்தப்பட்ட சந்தேக நபரின் வங்கிகளுக்கு ஆணை அனுப்பப்பட்டதன் பேரில் சந்தேக நபரின் வங்கி கணக்கிலிருந்து தொகையான ரூ.9,00,339/- கனம் குற்றவியல் நீதிமன்றம் எண்.4, நீதிமன்றத்தின் வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி தொகையினை மனுதாரர் வசம் ஒப்படைக்க எவ்வித ஆட்சேபனையும் இல்லை என அரசுத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) அனைத்து தரப்பு வாதங்களையும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்ததிலிருந்து, போலீசாரால் முடக்கம் செய்யப்பட்டு, இந்நீதிமன்ற உத்தரவின் படி இந்நீதிமன்ற வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையான ரூ.9,00,339/- யை மனுதாரர் ஜெயந்தி என்பவரின் வங்கி கணக்கிற்கு பின்வரும் நிபந்தனைகளுடன் மாற்றம் செய்ய இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**நிபந்தனைகள்**

1) மனுதாரர் வழக்கு சொத்தின் மதிப்புற்குண்டான பிணைமுறி ஆவணத்தை இரண்டு ஜாமீன்தாரர்களுடன் ரூ.9,10,000/- க்கு எழுதிக் கொடுக்கவேண்டும் என்றும்,

2) மேலும் மேற்படி தொகையினை இந்நீதிமன்றம் உத்தரவிடும் போதும், வழக்கு விசாரணையின் போதும் இந்நீதிமன்றத்தில் ஒப்படைப்பேன் என்று கூறி உறுதிமொழி ஆவணத்தை மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும்,

3) மேலும் இந்நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் மற்றும் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தை இந்நீதிமன்றத்தின் தலைமை எழுத்தர் கண்ணுற்று ஆராய்ந்து மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ஒன்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

4) மேற்படி நிபந்தனைகளை மனுதாரர் நிறைவேற்றிய பின்னர் இந்நீதிமன்ற உத்தரவின் படி இந்நீதிமன்ற வங்கி கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையான ரூ.9,00,339/- யை மனுதாரரின் வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஏப்ரல் திங்கள் 10 ம் நாள் இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Arunkumar)
நீதித்துறை நடுவர் எண்.4,
கோயமுத்தூர்.